மூன்று ஆண்டுகள் தள்ளுபடி செய்யவேண்டுமென்று டெலிகிராம் அனிப்பிய காரணத்தாலும் இந்த அரசாங்கம் குறைகளைக் கவனித்து மீண்டும் மூன்று ஆண்டுகளுக்குத் தள்ளி வைக்க முடிவு எடுக்கத் தயாராக இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்போது 31-3-1969 வரையில் கால நீடிப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இந்தத் தேதிக்குள்ளாக அவர்கள் தங்களது மனுக்களைத்தர வேண்டும். அவற்றை பரிசீலனை செய்து அவசியப்பட்டால் காலவரையறை நீடிக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : Since this Act is an all-pervading one which applies to all public institutions and buildings and whereas the request of the petty stall holders to postpone the Act for a few years could not be met, will the Government think of the possibility of exempting these small shop-keepers and small establishments from the purview of this Act. ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : விதிவிலக்குத் தருவதற்குச் செயற்குறிப்பு எதுவும் இல்லை. அவ்வப்போது அவர்கள் புதுப்பித்துக் கொள்ளலாம். காலவரையறையை நீடிக்க வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

இடும்பாவனம் ஸ்ரீ சற்குணநாத சுவாமி தேவஸ்தானம்

*265. வினா.—**திரு. பி. எஸ். தனுஷ்கோடி:** மாண்புமிகு அற நிலைய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தஞ்சை மாவட்டம், திருத்துறைப்பூண்டி தாலுக்கா இடும்பாவனம் ஸ்ரீ சற்குணநாதஸ்வாமி தேவஸ்தானத்திற்குச் சொந்தமான திருத்துறைப்பூண்டி சன்னதி தெருவில் உள்ள மனையையும் அதில் அமைந்துள்ள வீட்டையும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யாமலும், மனையையும் வீட்டையும் ரூ. 25,000-க்கு மேல் ஒருவர் எடுத்துக் கொள்ள முன் வந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தியதைப் புறக்கணித்தும் மேற்படி வீட்டில் குடியிருக்கும் ஒருவருக்கு ரூ. 14,000-க்கு கிரயம் செய்து கொடுக்கப்பட்டதா ?

(இ) ஆம் எனில், விற்பனையை ரத்து செய்து பகிரங்க ஏலத்தில் விடப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம்.

(இ) இல்லை.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : இப்போது இல்லாவிட்டாலும் உடனடியாக அதை ரத்து செய்து சரியாகப் பணம் கிடைக்கக்கூடிய அளவில் அந்த இடத்தை விற்க அரசு துரித நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அந்த மனையை வாங்கியவர் 1927-ம் ஆண்டிலிருந்து அங்கு குடியிருந்து வருகிறார். அந்த வீட்டுக்காக ஏற்கெனவே அவர் கிட்டத்தட்ட 13,000 ரூபாய் வரை செலவு செய்திருக்கிற காரணத்தாலும், அவரை வெளியேற்ற சட்டம் இடம் கொடுக்காத காரணத்தாலும் அந்த வீட்டை அவரிடமே விற்றால்தான் இலாபம் இருக்கிறது என்ற காரணத்தாலும்தான் விற்கப்பட்டது.

திரு. கே. என். குமாரசாமி : அதிகமான விலைக்கு ஏலத்தில் எடுக்க பலர் தயாராக இருந்தும் அவருக்கே விற்கக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : குடியிருந்த அவரை வெளியேற்ற சட்டம் இடம் கொடுக்காத காரணத்தால்தான் அவரிடமே விற்கப்பட்டது.

திரு எம். ஆர். கண்ணன் : தற்போது பலர் கோயில் வீடுகளில் குறைந்த வாடகைக்கு இருந்துகொண்டு அந்த நிலத்தையெல்லாம் உபயோகித்து வருகிறுர்கள். இதைப் பற்றி ஒரு சர்வே செய்து இந்த முறைகளை நல்லபடி திருத்தியமைக்க வேண்டிய நடவடிக்கை எடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தனிக் கேள்வி போடவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

(அ) மண்ணெண்ணெய் பங்கீட்டு முறையில் திடீர் மாறுதலும் வண்டிக்காரர்கள் வேலை இழப்பும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறுர்கள். அதாவது,

'I move that this House stands adjourned to discuss a matter of urgent public importance, namely, the sudden order of the Commissioner of Civil Supplies re-orienting the distribution system of kerosene oil resulting in the unemployment of nearly three thousand kerosene oil cart pullers'

என்று அறிவிக்கையில் கண்டிருக்கிறது. இது இந்த அரசின் அன்றாட நிகழ்ச்சிகளுக்கு உட்பட்டது. மேலும் உறுப்பினர் அவர்களுக்கு வருகிற மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பிருப்பதால் இதற்கு நான் அனுமதி தர மறுக்கிறேன்.

(ஆ) மதுரை தியாகராயர் கல்லூரி மாணவர்கள் கல்லூரி தின விழாவில் தேசியகீதம் பாடுவதைத் தடுத்தது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறுர்கள். அதாவது,

'That the business of the Assembly do stand adjourned for the purpose of discussing a definite matter of urgent public importance, namely, that the students of the Thyagaraja College, Madurai, have prevented the National Anthem being sung on 9th March 1969 at the conclusion of the College Day Celebrations while the Tamil Nadu Education Minister was presiding over that function'

என்று அறிவிக்கையில் இருக்கிறது. இது எப்படி இந்த அவையை ஒத்தி வைத்து விவாதிப்பதற்குரியது என்பது பற்றி மட்டும் அவர்கள் விளக்கக் கோருகிறேன்.

* **திரு ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, 9-3-1969-ம் தேதி அன்று நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் உயர்திரு மாதவன் அவர்கள் அந்தக் கல்லூரி காலேஜ் டேயில் தலைமை தாங்கி நடத்திய தாகவும் கடைசியாக தேசீய கீதம் பாடுவதற்கு முன்னடியாக ஒரு சிலர் அந்த மேடையில் புகுந்து தேசிய கீதம் போடுவதை தடைசெய்ததாக நான் கேள்விப்பட்டேன். இந்த மாதிரியான நிகழ்ச்சிகள் ஆங்காங்கு நடைபெறுமானுல் இந்தத் தேசத்தின் ஒற்றுமையை அது குலேக்கும் என்ற காரணத்தினுல் அதிலும் குறிப்பாக நாம் நாட்டு வணக்கம் பாடுகிற ஒரு மரபை நம் மாணவர்களானுலும் சரி அல்லது தேசத் தலைவர்